# மணிமேகலைப் பிரசுரம்

7 (ப.எண் 4), தணிகாசலம் சாலை,
தியாகராயநகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 2434 2926, 2434 6082, 91764 51934
மின்அஞ்சல் : manimekalaiprasuram@gmail.com
மின் இணையம் : www.tamilvanan.com

## எழுத்தாளர் - பதிப்பாளர் முதலீட்டுத் திட்டம்

1-8-2020

அன்புடையீர்,

வணக்கம்.

தங்களின் ................ தேதியிட்ட கடிதம் கிடைக்கப் பெற்றோம். தங்களின் படைப்பை புத்தகமாக வெளியிட விரும்புவது குறித்து மகிழ்ச்சி. ஆர்வத்துடன் எழுதியமைக்கு நன்றி. இத்திட்டம் பற்றிய விவரங்களைப் பார்ப்போம்.

- **எழுத்தாளர் - பதிப்பாளர் முதலீட்டுத் திட்டம் என்றால் என்ன?**

ஒரு புத்தகத்தை சிறப்பான முறையில் வெளியிடத் தாங்களும், நாங்களும் சேர்ந்து தொகையை முதலீடு செய்து நூலை வெளியிடுவதுதான் இத்திட்டம்.

- **இத்திட்டத்திற்கான அவசியம் என்ன?**

ஓர் எழுத்தாளர் தனிப்பட்ட முறையில் ஒரு புத்தகத்தை வெளியிடுவதில் நிறைய நடைமுறைச் சிரமங்கள் உள்ளன. அப்படியே வெளியிட்டாலும் விற்பனை செய்வது மிகவும் கடினம். ஆனால் 64 வருட அனுபவமுள்ள மணிமேகலைப் பிரசுரம் இப்பணியை மிகச் சிறப்பாகச் செய்ய முடியும். காரணம், எங்கள் காட்சிக்கூடத்திலும், தபால் மூலமும், புத்தக விற்பனையாளர்கள் மூலமும், நூல் விற்பனை நிலையங்கள் மூலமும், மின் இணையம் (Website) மூலமும், உள்நாட்டு - வெளிநாட்டுப் புத்தக விற்பனைக் கண்காட்சிகள் மூலமும், ஏற்றுமதியாளர்கள் மூலமும் எங்களால் விற்பனையை மிகச் சிறப்பாகச் செய்ய முடிவதுதான்!

- **இத்திட்டம் வெற்றியைப் பெற்றிருக்கிறதா?**

சந்தேகமில்லாமல்! நூற்றுக்கணக்கான நூல்கள் இத்திட்டத்தின் கீழ் வெளிவந்து அரசுப் பொது நூலக இயக்ககத்தால் வாங்கப்பட்டு, ஏராளமான பரிசுகளையும் வென்றிருக்கின்றன.

- **முதலீட்டுத் தொகை எவ்வளவு?**

எல்லா நூல்களையும் கம்ப்யூட்டரில் லேஸர் கம்போஸ் செய்து ஆப்ஸெட் முறையில் அச்சிடுகிறோம். இதற்குத் தங்களின் பங்களிப்பாக ரூ. 18,000ம் முதலீடு செய்யவேண்டும். இலங்கை ரூபாயாக இருந்தால் ரூ.50,000 முதலீடு செய்யவேண்டும். இந்த அடிப்படையில் இலண்டனில் வசிக்கும் எழுத்தாளர்கள் 250 ஸ்டர்லிங் பவுண்டும், கனடாவில் வசிப்பவர்கள் 400 டாலர்களும், அமெரிக்காவில் வசிப்பவர்கள் 300 டாலர்களும், துபையில் வசிப்பவர்கள் 1,300 திர்ஹாமும், மலேசியாவில் வசிப்பவர்கள் RM1500-ரிங்கட்டும் முதலீடு செய்ய வேண்டும். நூல்களை அனுப்பி வைப்பதற்கான செலவு ஆசிரியர்களைச் சார்ந்தது.

சுயவரலாறு; ஆங்கில நூல்கள்; ஆய்விற்குரிய (Ph.D,) ஸ்கிரிப்ட்டுகள் போன்றவை வெளியிடவேண்டுமெனில் நூல் தயாரிப்பிற் குரிய முழுத் தொகையையும் ஆசிரியர் தரவேண்டும்.

- **நூலின் அளவும், பக்க வரையறையும்**

நூலின் அளவு கிரௌன் (12 x 18 செ.மீ) அளவில் இருக்கும். சிறுகதை, நாவல், கட்டுரைகள் போன்ற தலைப்புகள் அச்சில் 160 பக்கங்களுக்குள்ளும்; கவிதைகள் எனில் 112 பக்கங்களுக்குள்ளும் இருக்க வேண்டும். தங்களின் பங்களிப்பு ரூ. 18,000. ஒருவேளை குறிப்பிட்ட பக்கங்களைவிட அதிகமானால், கூடுதலான ஒவ்வொரு 16 பக்கங்களுக்கும் ரூ.1,600 வீதம் செலுத்த வேண்டும்.

சற்றுப் பெரிய அளவான (14 x 21 செ.மீ) டெம்மி சைஸ் எனில் ரூ.23,000மும், ஒவ்வொரு கூடுதல் 16 பக்கங்களுக்கும் ரூ.2,100 வீதம் செலுத்த வேண்டும். குறைந்தபட்சம் 64 பக்கங்கள் இருக்க வேண்டும். பக்கங்கள் குறைவதால் தொகை குறையாது. காரணம், அடிப்படையான வண்ண அட்டைப்படம்; அச்சுக்கூலி; நூல் தயாரிப்பு; உழைப்பு போன்றவற்றில் பெரிய மாறுதல்கள் ஏற்படுவதில்லை என்பதுதான்!

- **எத்தனை பிரதிகள் அச்சிடப்படும்? விநியோகம் எப்படி?**

கவிதைகள், சிறுகதை, கட்டுரை, நாவல் ஆகிய தலைப்புகளில் அச்சிடப்படும் 1,000 பிரதிகளுள் 100 பிரதிகளை அரசுப் பொது நூலகங்கள், கன்னிமாரா நூல் நிலையம் உட்பட இந்தியாவில் உள்ள 7 முக்கிய நூலகங்களுக்கு மாதிரிப் பிரதிகள் அனுப்பப்படுகின்றன. பல்வேறு தினசரி, வார, மாதப் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் ஆகியவற்றிற்கு விமரிசன மதிப்புரைக்கு அனுப்புகிறோம். 300 பிரதிகளைத் (கவிதை எனில் 400 பிரதிகளைத்) தங்களுக்குத் தருகிறோம். நூல்களைப் பெற்றுக்கொள்ள ஆகும் செலவு நூலாசிரியரைச்

சேர்ந்தது ஆகும். மீதிப் பிரதிகளின் வரவுத் தொகை நூல் வெளியிட நாங்கள் செலவழித்தத் தொகை, விளம்பரச் செலவு மற்றும் எங்கள் உழைப்பிற்காக எங்களைச் சேர்ந்ததாகிறது.

- **சிக்கனமான மற்றொரு அச்சு முறை**

இந்த அச்சு முறையில் குறைவான பிரதிகளை அச்சிட்டு, ஆசிரியருக்கு 150 பிரதிகள் தரலாம். தங்கள் பங்குத்தொகை கிரௌன் சைஸ் (12 x 18 செ.மீ) ரூ. 13,000ம், டெம்மி சைஸாக (14 x 21 செ.மீ) இருந்தால் ரூ. 16,000ம் ஆகும். கவிதை எனில் 112 பக்கங்கள், உரைநடை எனில் 160 பக்கங்கள் வரை இருக்கலாம். பக்கங்கள் அதிகமானால், கூடுதல் ஒவ்வொரு 16 பக்கங்களுக்கும் கிரௌன் சைஸாக இருந்தால் ரூ. 1,200ம், டெம்மி சைஸானால் ரூ. 1,500ம் சேரும்.

- **கையெழுத்துப் பிரதியை அனுப்பும் முறை எப்படி?**

தங்களின் படைப்பு கையெழுத்துப் பிரதியாக இருக்கலாம். ஆனால் எழுத்துகள் தெளிவாக இருக்க வேண்டும். கம்ப்யூட்டரில் கம்போஸ் செய்யப்பட்டதாகவும் இருக்கலாம். மொத்தப் பக்கங்களையும் நகல் எடுத்து வைத்துக்கொண்டு, மூலப்பிரதியை மட்டும் நேரிலோ, தபால் மூலமோ தரலாம். மூலப்பிரதி பல்வேறு நிலைகளில் சுற்றிவருவதால் (நூல் அச்சாகி முடிந்தபிறகு) அதை தங்களுக்குத் திருப்பி அனுப்புவது இயலாது. வெளியூர்களிலிருந்து நேரில் வர இயலாதவர்கள் கூரியர் மூலமோ, பதிவுத் தபாலிலோ அனுப்பலாம். கம்போஸ் செய்த மேட்டர் எனில் (Fonts ஐயும் சேர்த்து) CD-யில் தரலாம், (E-mail) மின்அஞ்சல் மூலமும் அனுப்பலாம். M.S. Word, Pagemaker, CDR, Indisign பைல்களாக அனுப்பவும். ஆசிரியர் உரையாகத் தங்களின் என்னுரை; மற்றவர்களிடமிருந்து பெறும் அணிந்துரை; வாழ்த்துரை ஆகியவற்றையும் சேர்த்து அனுப்பலாம். ஸ்கிரிப்ட் முழுவதையும் ஒரேதடவையில் அனுப்புவது நல்லது, **தனித்தனியாக சிறிது சிறிதாக விஷயங்களை அனுப்பி சேர்க்கச் சொல்வதைத் தவிர்க்கவும்.** ஸ்கிரிப்டை அனுப்பும்போதே சேர்க்கவேண்டிய அனைத்து மேட்டர்களையும் சேர்த்து முழுமையான திருப்தியான ஸ்கிரிப்டாக அனுப்பவும். கவிதைகள் எனில் 112 பக்கங்கள், மற்றவை 160 பக்கங்கள் என்ற பக்கவரையறை உள்ளதால், அதற்கேற்ப முக்கியமானவற்றை முன் பகுதிகளிலும், மற்றவற்றைப் பின்பகுதியிலும் வரிசைப்படுத்தி அனுப்புங்கள்.

- **நூலின் அட்டைப்படம்**

நூலின் அட்டைப்படம் எப்படி இருக்க வேண்டுமென விரும்புகிறீர்களோ அதை எங்கள் ஓவியருக்குக் காட்சி விளக்கமாக எழுதி அனுப்பவும். பின் அட்டைப்படத்தில் இடம் பெற தங்களைப்பற்றி அரைப்

பக்கமும், தங்கள் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தின் இரண்டு பிரதிகளையும் அனுப்பவும்.

- **மெய்ப்பு எனப்படும் புரூப்**

ஸ்கிரிப்ட்டும், தொகையும் கொடுத்த நாளிலிருந்து 15 நாட்களுக்குப் பிறகு தங்களுக்கு புரூப் அனுப்பி வைக்கப்படும். கம்போஸிங் முடிந்ததும், நாங்கள் புரூப் திருத்திய பிறகு, புரூப் உங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும். புரூப்பில், ஏற்கெனவே அனுப்பிய ஸ்கிரிப்டிலிருந்து ஏதாவது விடுபட்டிருந்தால் மட்டுமே குறிப்பிடலாம், எழுத்துப் பிழைகளைத் திருத்தலாம். **புரூபில் புதியதாக எந்த விஷயத்தையும் சேர்க்க வேண்டாம். ஒரு பகுதியை மற்றொரு பகுதிக்கு மாற்றம் செய்யச் சொல்வதைத் தவிர்க்கவும். புரூபிற்குப் பிறகு அடிக்கடி விஷயங்களை சேர்க்கச் சொல்லி அனுப்புவதையும் தவிர்க்க வேண்டுகிறோம்.** வெளிநாடுகள் எனில் பைனல் புரூப் (E-mail) மின்அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

- **நூல் தலைப்புத் தேர்வு பற்றி...**

தங்களின் படைப்பிற்குரிய தலைப்பு வாசகர்களை வாங்கத் தூண்டும்படியாகவும், பொது நூலகத்துறை தேர்ந்தெடுக்கும்படியாகவும் இருத்தல் அவசியம். எனவே, தாங்கள் ஐந்து வித்தியாசமான தலைப்பு யோசனைகளை எழுதியனுப்புங்கள். இவற்றுள் ஒன்றைத் தேர்ந்தெடுப்பது சுலபமாகும்.

- **தொகையை எப்படிச் செலுத்துவது?**

நேரில் வருபவர்கள் பணமாகச் செலுத்தலாம். காசோலையாகத் தரலாம். வெளியூரில் இருப்பவர்கள் இந்தியன் வங்கி மூலமும் அனுப்பலாம். Manimekalai Prasuram என்ற பெயரில் பாங்க் டிராப்ட்டாக அனுப்பலாம். MANIMEKALAI PRASURAM, Account Number - 418745305, Indian Bank, Panagal Park, T.Nagar, Chennai Branch Code - 100, India. IFS Code - IDIB 000 T014. வங்கி மூலம் பணம் அனுப்புபவர்கள் உடனடியாகப் பணம் கட்டிய விவரத்தை எங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுகிறோம். தொகையை ஒரே நேரத்தில் செலுத்த இயலாதவர்கள் இரு தவணைகளில் செலுத்தலாம். நூல் அச்சாகி முடிவதற்குள் முழுத்தொகையையும் செலுத்திவிட வேண்டும். வெளிநாடுகளில் உள்ளவர்கள் Western Union Money Transfer மூலம் SUBRAMANI MURUGESAN என்ற பெயருக்குத் தொகையை அனுப்பி வைக்கலாம்.

- **கையெழுத்துப் பிரதிகளின் தேர்வு எப்படி?**

தாங்கள் அனுப்பும் கவிதைகள், சிறுகதைகள், நாவல், கட்டுரைத் தொகுப்புகள் எதுவாக இருந்தாலும் எங்களின் ஆசிரியர் குழு முழுமையாகப் படித்துப் பரிசீலனை செய்யும். பிரசுரிக்க இயலாதவை

பரிசீலனைத் தொகையாக ரூ.1000ஐக் கழித்துக்கொண்டு மீதித் தொகையுடன் திரும்ப அனுப்பி வைக்கப்படும்.

- **புத்தகத்தின் உரிமையும் பதிப்பகமும்**

புத்தக உரிமை சந்தேகமின்றி தங்களுக்குத்தான்! இதை உறுதி செய்யும் முகமாக நூலின் 2 ஆம் பக்கத்தில் அச்சிடவும் செய்கிறோம். தமிழக பொது நூலக ஆர்டரைப் பெற 10 பிரதிகளை மட்டும் எங்கள் சார்பு நிறுவனமான இராமநாதன் பதிப்பகம், குட்புக்ஸ் பப்ளிகேஷன்ஸ், தமிழ்மணி நிலையம், சரஸ்வதி புத்தகாலயம் சார்பில் நூலை அச்சிடுவோம்.

- **நூல் வெளியீட்டு விழா விவரம்**

தங்கள் முயற்சியில் தங்கள் நூலின் வெளியீட்டு விழாவைச் செய்துகொள்ளலாம். வெளியீட்டு விழா நடைபெறும்போது, அழைப்பிதழில் இந்நூல் மணிமேகலைப் பிரசுர வெளியீடு எனக் குறிப்பிட வேண்டுகிறோம். நாங்களும் ஒவ்வொரு மாவட்டத்திலும், மாநிலத்திலும், நாடுகளிலும் நூல்களை சிறப்பான முறையில் வெளியிடுகிறோம். அப்படி வெளியிடும்போது தங்களுக்கும் தெரிவிப்போம்,

சென்னையில், ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 2-ஆவது வாரத்தில் பொங்கல் பண்டிகை நாட்களில் சென்னைப் புத்தகத் திருவிழாவில் பிரமாண்டமான அளவில் எங்கள் நூலாசிரியர்களின் நூல் வெளியீட்டு விழாவை சிறப்பான முறையில் பல்லாண்டுகளாக நடத்தி வருகிறோம். முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொள்ளும் இவ்விழா பற்றி பல்வேறு தொலைக்காட்சிகளிலும் பத்திரிகைகளிலும் செய்திகள் வெளியாகி வருகின்றன. இவ்விழாவில் தங்களின் நூலும் இடம்பெற விருப்பமிருக்குமாயின் தெரிவியுங்கள். அரங்க வாடகை, ஆயிரக்கணக்கான அழைப்புகள் அச்சிடும் பணி, மேடை ஏற்பாடுகள் இவற்றிற்குத் தங்களின் பங்களிப்பாக ரூ.5,000 செலுத்த வேண்டும்.

- **மறுபதிப்பு மற்றும் ராயல்டி தொகை பற்றி**

புத்தகம் விற்றுத் தீர்ந்துவிடின் மறுபதிப்பு செய்யும்போது கலந்துபேசி தங்களின் அபிப்பிராயப்படி செய்துகொள்ளலாம். தங்களின் எழுத்துகள் மீது தங்களுக்கு இருக்கும் முழு நம்பிக்கையில் தாங்கள் முதலீடு செய்கிறீர்கள்! நாங்களும் அதே அளவிற்கு நம்பிக்கை கொண்டு எங்கள் பங்களிப்பையும் செய்வதோடு விளம்பரம், விற்பனை முயற்சி எனப் பெருமளவில் செலவு செய்கிறோம். எனவே, இதுபோக ராயல்டி அளிக்க இயலாத நிலை.

- **என்னென்ன பத்திரிகைகளுக்கு மதிப்புரைக்காக நூல்கள் அனுப்பப்படுகின்றன?**

Hindu, தினமலர், தினத்தந்தி, தினமணி, துக்ளக், கல்கி, லேடீஸ்

ஸ்பெஷல், தங்கமங்கை, பாவையர் மலர், ஸ்ரீராமகிருஷ்ண விஜயம், சக்தி விகடன்,

- **இணைய தளங்களில்**

எங்கள் நூல்களை கீழ்க்காணும் வெப்சைட்டுகளின் மூலம் விற்பனையை மேற்கொண்டுள்ளோம்.

tamilvanan.com; www.amazon.in; www.emagazin.com; www.marinabooks.com; www.kizhakku.in; For Soft Copy ebooks.amazon.in / kindle ; www.mywannado.com

- **பரிசுப் போட்டிகள் பற்றிய முழு விவரங்கள்**

தங்களின் நூல்கள் அடுத்த பக்கங்களில் காணும் பரிசுப்போட்டிகளில் தகுதியானவற்றிற்குத் தாங்களே நேரிடையாக அனுப்பலாம். நாங்களும் சில பரிசுப்போட்டிகளுக்கு அனுப்பி வைப்போம்.

இதுவரை மணிமேகலைப் பிரசுரம் வெளியிட்டுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் பல போட்டிகளில் பரிசுகளை வென்று, ஆசிரியர்களுக்குப் பணமுடிப்புகளைப் பெற்றுத் தந்துள்ளன என்பது இங்குக் குறிப்பிட வேண்டிய முக்கியமான இனிய செய்தியாகும். உங்களுக்கு உதவும் வகையில் பரிசுப்போட்டி பற்றிய விவரமான அறிக்கை அடுத்த பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

- **வெளிநாட்டில் வாழும் எழுத்தாளர்களுக்கு**

லேசர் கம்போஸிங் செய்யப்பட்ட புரூப்பையும், முதல் 2 பிரதிகளையும் விமானத் தபாலில் அனுப்பும் செலவுகள் இருப்பதால் இதற்கென முதலீட்டுத் தொகையோடு ரூ. 1000/- கூடுதலாகச் சேர்த்து, அனுப்ப வேண்டுகிறோம். தங்களுக்கான 300 பிரதிகளில் 2 பிரதிகளை எங்கள் செலவில் விமானத் தபாலில் அனுப்பிவைப்போம். தங்கள் செலவில் அவசரப் பிரதிகள் 25 (அ) 50ஐ விமானத் தபாலில் பெற்றுக் கொண்டு, மற்றப் பிரதிகளை Salmail மூலமும் (அ) சென்னையிலிருந்து வருபவர்கள் மூலமும் பெற்றுக்கொள்வது சிக்கனம்.

இறுதியாக ஒரு வார்த்தை - எவ்வளவுதான் பத்திரிகைகளில் தாங்கள் எழுதி வெளிவந்திருந்தாலும், அப்படைப்புகளை காலத்தால் அழிக்க முடியாத கல்வெட்டாக மாற்றவேண்டுமாயின் அவை புத்தக வடிவைப் பெறவேண்டியது மிக அவசியம். இதற்குத் தங்களுக்கு உதவ மணிமேகலைப் பிரசுரம் மகிழ்வோடு காத்திருக்கிறது.

தொடர்பு கொள்ளுங்கள். வாழ்த்துகள்!

அன்புடன்,
நிர்வாகி.

## ● வெளிநாடுகளில் புத்தக விற்பனைக் கண்காட்சி!

எங்களின் நிர்வாக இயக்குநர் திரு. ரவி தமிழ்வாணன் கலந்து கொண்டு கடந்த சில ஆண்டுகளாக வெளிநாடுகளில் நடத்திய மணிமேகலைப் பிரசுர புத்தக விற்பனைக் கண்காட்சி பற்றிய விவரம்.

ஜூலை 2004இல் இலங்கையின் வவுனியா, கிளிநொச்சி, இனுவில், யாழ்ப்பாணம், நைனா தீவு, அனலைத் தீவு. ஆகஸ்ட் கொழும்பு தமிழ்ச் சங்கம்; அக்டோபர் துபை; நவம்பரில் திருக்கோணமலை மாவட்டத்தில் கின்னியா, மூதூர். 2004ஆம் ஆண்டு 5 முறை கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் ஈழ எழுத்தாளர்களின் நூல் வெளியீட்டு விழா.

2005 பிப்ரவரியில் பாங்காக்; ஹாங்காங்; ஜூனில் அமெரிக்கா, கனடா, இலண்டன்; டிசம்பரில் யாழ்ப்பாணம். ஜனவரி 2006இல் ஆஸ்திரேலியா, சிங்கப்பூர்; பிப்ரவரியில் மலேஷியா; மார்ச்சில் துபை; ஏப்ரலில் இலங்கை; 2006 ஜூன் மற்றும் 2007 ஜூலை மாதங்களில் அமெரிக்கா, கனடா, இலண்டன், சுவிட்சர்லாந்து, துபை; 2008லிருந்து 2011 வரை ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி இலங்கை; மார்ச் ஆஸ்திரேலியா, ஏப்ரலில் சிங்கப்பூர்; மே மாதம் கனடா, அமெரிக்கா, இலண்டன்; ஜூன் மாதம் அபிதாபி, துபை; ஜூலையில் சிங்கப்பூர், மலேசியா எனப் பயணங்கள் தொடர்கின்றன. இதன் மூலம் தங்கள் புத்தகங்கள் உலகின் பல பகுதிகளிலும் விற்பனையாகும் வாய்ப்புகள் உள்ளன. ஒவ்வொரு வருடத்தின் ஜனவரி இரண்டாம் வாரத்திலும் சென்னைப் புத்தகத் திருவிழாவில் பிரமுகர்களின் முன்னிலையில் தொடர்ச்சியாக வெளியீட்டு விழாக்கள்.

2012 பிப்ரவரி மற்றும் 2013ஆம் ஆண்டு ஆகஸ்டு இலங்கை, மார்ச்சில் ஜப்பானின் டோக்கியோ, ஒசாகா. ஏப்ரலில் துபை. ஜூன் - ஜூலையில் அமெரிக்கா, இலண்டன், மலேசியா. ஆகஸ்ட்டில் தாய்லாந்து, செப்டம்பரில் இலங்கை. நவம்பரில் சீனாவின் பீஜிங் மற்றும் ஷாங்காய் நகரங்கள். 2013 மார்ச்சில் பர்மா எனப்படும் மியான்மர். 2015-இல் அமெரிக்கா. 2017-இல் மீண்டும் அமெரிக்கா, துபை மற்றும் ரஷ்யா, ஆப்ரிக்கா. 2018இல் கொழும்பு, மலேசியா, ஆஸ்திரியா, பிரான்ஸ், பெல்ஜியம், அமெரிக்கா எனக் புத்தகவிற்பனைக் கண்காட்சிப் பயணங்கள் தொடர்கின்றன! 2019இல் கம்போடியா, வியட்நாம், சிங்கப்பூர். 2020 ஜனவரியில் : சிங்கப்பூர், இந்தோனேசியா.

# பரிசுப் போட்டி விவரங்கள்

| வ.எண் | விலாசம் | தலைப்பு | அனுப்ப வேண்டிய பிரதிகள் | பரிசுத்தொகை |
|---|---|---|---|---|
| 1. | தமிழ் வளர்ச்சி இயக்குநர்,<br>தமிழ் வளர்ச்சி இயக்ககம்,<br>தமிழ் வளர்ச்சி வளாகம்,<br>எழும்பூர், தமிழ்ச் சாலை,<br>சென்னை - 600 008.<br>போன் : 28190412, 28190413<br>www.tn.gov.in | கவிதை, புதினம், சிறுகதை,<br>நாடகம், இலக்கியம், கட்டுரை,<br>மானுடவியல், சமூகவியல்,<br>வாழ்க்கை வரலாறு,<br>அறிவியல், குழந்தை இலக்கியம்<br>(குறைந்தபட்சப் பக்க வரையறை<br>180 பக்கங்கள்) | 6 | பரிசு எண்ணிக்கை 33<br>பரிசுத்தொகை<br>ரூ.30,000/- வீதம்<br>ரூ.9,90,000/- |
| 2. | ஆதித்தனார் இலக்கியப் பரிசு,<br>தினத்தந்தி, 86, ஈ.வி.கே.<br>சம்பத் சாலை, சென்னை-600 007.<br>போன் : 26618661 | கதை, கவிதை, நாடகம்<br>கட்டுரை | 6 | ரூ. 1,50,000/-; |
| 3. | திருப்பூர் தமிழ்ச்சங்கம்,<br>33, கே.பி.என். காலனி, 3ஆவது வீதி,<br>திருப்பூர் - 641 601. செல்:9843060666<br>போன் : 0421-2202441, 2202666 | நாவல், சிறுகதை, கவிதை,<br>மொழிபெயர்ப்பு நாடகம்,<br>கட்டுரை, சிறுவர் இலக்கியம் | 2 | ரூ. 5,000/-<br>மொத்தப் பரிசுகள்<br>ரூ. 30,000/- |
| 4. | முனைவர் மு. கலைவேந்தன்<br>தலைவர் தமிழய்யா கல்விக் கழகம்,<br>ஔவைக்கோட்டம், 153, வடக்கு வீதி,<br>திருவையாறு - 613 204.<br>தஞ்சாவூர் மாவட்டம்.<br>போன் : 04362 - 260711,<br>செல் : 9486742503 | கவிதை, கட்டுரை, திறனாய்வு<br>படைப்புகள், நாடகங்கள்,<br>சிறுகதைத் தொகுப்புகள்,<br>நாவல்கள், வரலாறு | 2 | ரூ. 1,000/-மும்<br>பொற்கிழியும் |

| வ.எண் | விலாசம் | தலைப்பு | அனுப்ப வேண்டிய பிரதிகள் | பரிசுத்தொகை |
|---|---|---|---|---|
| 5. | வள்ளியப்பா இலக்கிய வட்டம்,<br>செல்லப்பா இல்லம்<br>54, வெங்கட்டரமணா சாலை,<br>ஆர்.எஸ்.புரம், கோவை-641002.<br>09487579711,09940561360. | சிறுவர் அறிவியல் நூல்,<br>இலக்கிய விருது | 3 | ரூ. 2,000/- |
| 6. | கருப்பண்ணன்-செல்லம்மாள் இலக்கிய<br>அறக்கட்டளை, புகழூர் தமிழ்ச் சங்கம்,<br>23, கலையகம், முல்லை நகர்,<br>வேலாயுதம் பாளையம்,<br>கரூர் மாவட்டம் - 639 117. | கட்டுரைகள், சிறுகதைகள்,<br>கவிதைகள் | 2 | ரூ. 2,000/- |
| 7. | கே.ஆர்.ஜி. நாகப்பன், இராஜாம்மாள்<br>அறக்கட்டளை இலக்கியக் குழு,<br>267, திருச்சி நெடுஞ்சாலை,<br>குகை, சேலம் - 636 006.<br>போன் : 0427-466266, 465564 | கவிதை, கட்டுரை, கதை,<br>நாடகம், புதினம், வரலாறு<br>பகுத்தறிவு நூலுக்கு | 2 | ரூ. 5,000/-வீதம் 2 பரிசு<br>மருத்துவ நூலுக்கு<br>ரூ. 5,000/-வீதம்<br>2 பரிசு<br>மொத்தப் பரிசு ரூ. 20,000/- |
| 8. | கவிதை உறவு<br>420E, மலர் காலனி,<br>அண்ணாநகர் மேற்கு,<br>சென்னை-600 040.<br>போன் : 26186464 | மரபுக்கவிதை<br>புதுக்கவிதை<br>சிறுகதைகள், நாவல்,<br>கட்டுரைகள் | 4 | முதல் பரிசு ரூ.5,000<br>இரண்டாம் பரிசு ரூ.3,000<br>மூன்றாம் பரிசு ரூ.2,000 |

| வ.எண் | விலாசம் | தலைப்பு | அனுப்ப வேண்டிய பிரதிகள் | பரிசுத்தொகை |
|---|---|---|---|---|
| 9. | காவ்யா அறக்கட்டளை<br>திலகமாமா, மதி மருத்துவமனை,<br>15/1, ஆறுமுகம் ரோடு,<br>சிவகாசி 626 123 | கவிதை<br>சிறுகதை | 2 | |
| 10. | திருமதி.ரங்கம்மாள் பரிசு,<br>கஸ்தூரி சீனிவாசன் அறநிலையம்<br>அவினாசி சாலை, கோவை - 641 014.<br>போன் : 0422 - 2574110<br>E-mail : kstculturecentre@gmail.com | எல்லாத் தலைப்புப் பிரிவுகளும் | 4 | ரூ. 25,000/- |
| 11. | Sahitya Akademi,<br>Rabindra Bhavan, 35, Ferozeshah Road,<br>New Delhi - 110 001.<br>Ph : 011-2338 2428, 2338 7064.<br>secretary@sahitya_akademi-gov.in<br><br>சென்னை முகவரி : Sahitya Akademi,<br>Guna Building, 2nd Floor,<br>443 (304) Anna Salai, Teynampet,<br>Chennai - 600 018.<br>Phone : 24354815, 24311741<br>E-mail : sahityaakademi_chennai@gmail.com | நாவல், கட்டுரை | 4 | ரூ. 50,000/- |

| வ.எண் | விலாசம் | தலைப்பு | அனுப்ப வேண்டிய பிரதிகள் | பரிசுத்தொகை |
|---|---|---|---|---|
| 12. | இலக்கிய நூல்களுக்கான பரிசித்தியம்<br>வடகிழக்கு மாகாண சபை,<br>உதவிப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள்<br>திணைக்களம் கல்வி அமைச்சு,<br>திருகோணமலை. | நாவல்,<br>சிறுகதை, கவிதை,<br>நாடகம், சிறுவர் இலக்கியம்,<br>இலக்கிய ஆய்வும் | 4 | இலங்கை ரூ. 10,000 |
| 13. | மகாகவி பாரதியார் விருது<br>பாரதியார் இல்லம்<br>இ-1, ஆர்.கே. நகர், நாவலூர் பிரிவு<br>மருதமலைச் சாலை,<br>பாரதியார் பல்கலைக்கழகம் அஞ்சல்<br>கோயமுத்தூர் - 641 046. | புதினம் - கவிதை<br>நாடகம் - சிறுகதை | 2 | ரூ.10,000 |
| 14. | மெய்யப்பன் அறக்கட்டளை<br>53, புதுத் தெரு, சிதம்பரம் - 608 001.<br>போன் : 04144-230069 | கட்டுரைகள்<br>மருத்துவம், அறிவியல் | 3 | 10,000 முதல்பரிசு |
| 15. | சேக்கிழார் ஆராய்ச்சி மையம்<br>சிவாலயா, 22/16, கற்பகாம்பாள் நகர்<br>மயிலாப்பூர், சென்னை-4<br>போன் : 24661425, 9941907477 | | 3 | 2 x 5000 2வதுபரிசு<br>2500 |

| வ.எண் | விலாசம் | தலைப்பு | அனுப்ப வேண்டிய பிரதிகள் | பரிசுத்தொகை |
|---|---|---|---|---|
| 16. | கவிஞர் ‘பா’ரதன்<br>பாரதி தமிழ் இலக்கியப் பேரவை,<br>பாரதி அச்சகம், அமராவதி திரையரங்கச்சந்து,<br>கம்பம் 625516, உத்தமபாளையம் வட்டம், தேனி மவாட்டம்,<br>போன் : 04554-323295, அலைபேசி : 9362850100 | அனைத்துப் புத்தகங்களும் | | ரூபாய் 5,000/- வீதம் |
| 17. | சுஜாதா அறக்கட்டளை விருது<br>உயிர்மை பதிப்பகம்<br>எண். 5, பரமேஸ்வரி நகர் முதல் தெரு,<br>அடையார், சென்னை - 600 020.<br>செல் : 90032 18208,<br>தொலைபேசி : 044 - 4858 6727<br>மின்னஞ்சல் : sujathaawards@gmail.com | கவிதை, சிறுகதை,<br>நாவல், கட்டுரை,<br>மொழிபெயர்ப்பு | 4 | ஒவ்வொரு விருதும்<br>10,000/- ரூபாய் |
| 18. | தமிழ்ப் பேராய விருது,<br>மைய நூலகக் கட்டம்<br>எஸ்.ஆர்.எம். பல்கலைக் கழகம்<br>காட்டாங்குளத்தூர்,<br>காஞ்சிபுரம் - 603 203 | கவிதை, சிறுகதை<br>நாவல், கட்டுரை, நாடகம் | 5 | 1,50,000 முதல்<br>5,00,000 வரை |

| வ.எண் | விலாசம் | தலைப்பு | அனுப்ப வேண்டிய பிரதிகள் | பரிசுத்தொகை |
|---|---|---|---|---|
| 19. | கவிஓவியா நூல் போட்டி<br>9ஏ, அபிராமி அவென்யூ<br>12 ஆவது தெரு,<br>கவியரசு கண்ணதாசன் நகர்<br>கொடுங்கையூர், சென்னை - 600118<br>செல் - 9840912010 | கவிதை, கட்டுரை<br>சிறுகதை, புதினம் | 3 | மொத்தப் பரிசு<br>ரூ.20,000 |
| 20. | ம.பொ.சி. இலக்கிய விருது<br>தே. இராமசாமி செட்டியார் நினைவு<br>அறக்கட்டளை, தடாகம் சாலை,<br>இடையார்பாளையம், கோவை - 641 025<br>செல் : 97902 00066, 98425 81875 | அனைத்துத் துறை | 3 | மொத்த பரிசுத்<br>தொகை ரூ. 25,000 |
| 21. | இராஜ கோகிலா அறக்கட்டளை<br>தென்குமரித் தமிழ்ச் சங்கம்<br>ஈத்தா மொழிச்சாலை, கோட்டாறு<br>நாகர்கோவில் - 629 902<br>செல் : 94431 32202 | தேசியம், தெய்வீகம்<br>சமூக மேம்பாடு | 3 | ரூ. 25,000 |
| 22. | சென்னைக் கம்பன் கழகம்<br>52/3, சௌந்தர்யா குடியிருப்பு,<br>அண்ணாநகர் மேற்கு விரிவு,<br>சென்னை - 600 101.<br>செல் : 99411 81345 | கம்பராமாயண ஆய்வு | 3 | அ.ச.ஞா. விருது<br>ரூ. 10,000/- |

| வ.எண் | விலாசம் | தலைப்பு | அனுப்ப வேண்டிய பிரதிகள் | பரிசுத்தொகை |
|---|---|---|---|---|
| 23. | கவிமுகில் அறக்கட்டளை<br>சக்தி கார்ஸ் வளாகம்<br>265/3, வேளச்சேரி உள்வட்டச்சாலை<br>ஆதம்பாக்கம், சென்னை - 600 091, | புதினம், சிறுகதை,<br>மரபுக் கவிதை, புதுக்கவிதை<br>ஐக்கூ கவிதை | 2 | ரூ. 25,000<br>ரூ. 10,000 |
| 24. | சேக்கிழார் ஆராய்ச்சி மையம்<br>கே. துரைசாமி,<br>54, வெங்கடகிருஷ்ணா சாலை,<br>ராஜா அண்ணாமலைபுரம்,<br>சென்னை - 600 028. | சமயம், இலக்கியம்,<br>மொழி, பண்பாடு,<br>நாட்டின் தொன்மை மரபு | 3 | முதல் பரிசு ரூ. 10,000<br>2-ஆம் பரிசு ரூ. 5,000<br>3-ஆம் பரிசு ரூ. 3,000 |
| 25. | ஆசிரியர்,<br>திசை எட்டும்,<br>6, பிள்ளையார் கோவில் தெரு,<br>மீனாட்சிப்பேட்டை<br>குறிஞ்சிப்பாடி - 607 302.<br>செல் : 94430 43583 | மொழியாக்கம்<br>தமிழ் to ஆங்கிலம்<br>மற்றும் பிற மொழி<br>ஆங்கிலம் மற்றும் பிற<br>மொழி to தமிழ் | 2 | ரூ. 15,000 |
| 26. | டாக்டர் வா.செ. குழந்தைசாமி<br>கல்வி ஆய்வு அறக்கட்டளை<br>தமிழ் மேம்பாட்டு விருது<br>5, LGR நகர்<br>ஆண்டாங்கோவில் கிழக்கு,<br>கரூர் - 639 008. | தொல்லியல்,<br>கல்வெட்டியல்,<br>நாணவியல்,<br>அகழாய்வு | 3 | ரூ. 20,000 |

| வ.எண் | விலாசம் | தலைப்பு | அனுப்ப வேண்டிய பிரதிகள் | பரிசுத்தொகை |
|---|---|---|---|---|
| 27. | மணிமேகலை மன்றம்<br>14/1, குறிஞ்சித் தெரு,<br>பி.எஸ்.கே. நகர் - அஞ்சல்,<br>ராஜபாளையம் - 626 108<br>செல் - 99444 15322 | கவிதை, சிறுகதை<br>நாவல், கட்டுரை<br>சிறுவர் இலக்கியம்,<br>மொழியாக்கம் | 3 | ரூ. 5,000 |
| 28. | ஈரோடு தமிழ்ச் சங்கப் பேரவை<br>38, கிருட்டிணசாமி வீதி,<br>நகராட்சிக் குடியிருப்பு,<br>ஈரோடு - 638 004<br>செல் : 91500 52927 | கதை, மரபுக் கவிதை<br>புதுக்கவிதை<br>கட்டுரை | 3 | முதல் பரிசு ரூ. 1,000<br>2-ஆம் பரிசு ரூ. 750<br>மூன்றாம் பரிசு ரூ. 500 |
| 29. | தலைவர்,<br>நாங்கள் இலக்கியகம்,<br>புத்தர் இல்லம்,<br>34, அக்ரஹாரம்,<br>பரமத்தி வேலூர் - 638 182.<br>நாமக்கல் மாவட்டம்.<br>செல் : 93601 10103 | கவிதை, கட்டுரை<br>சிறுகதை | 2 | மொத்தம் ரூ. 33,000<br>ஒவ்வொரு பிரிவிற்கும்<br>முதல் பரிசு ரூ. 5,000<br>2-ஆம் பரிசு ரூ. 3,000<br>3-ஆம் பரிசு ரூ. 2,000<br>சிறப்புப் பரிசு ரூ. 1,000 |
| 30. | சேலம் தமிழ்ச் சங்கம்<br>103, தமிழ் சங்கச் சாலை,<br>சேலம் - 636 007<br>செல் : 9442610565 | இலக்கிய நவீனம்,<br>ஆராய்ச்சி கட்டுரை<br>கவிதை, மொழிபெயர்ப்பு | 3 | ஒவ்வொரு பிரிவிற்கும்<br>முதல் பரிசு ரூ. 5,000<br>2-ஆம் பரிசு ரூ. 3,000<br>3-ஆம் பரிசு ரூ. 2,000<br>ஆறுதல் பரிசு - ரூ. 1,000 |

| வ.எண் | விலாசம் | தலைப்பு | அனுப்ப வேண்டிய பிரதிகள் | பரிசுத்தொகை |
|---|---|---|---|---|
| 31. | தமிழ் இலக்கிய ஆர்வலர் பேரவை<br>மதர் தெரசா பள்ளி,<br>256, மதர் தெரசா கோவில் தெரு,<br>மருதுபாண்டியர் நகர்,<br>பாடியநல்லூர், சென்னை - 600 052.<br>செல் : 98848 69566 | கவிதை, சிறுகதை | 4 | ஒவ்வொரு பிரிவிற்கும்<br>முதல் பரிசு ரூ. 3,000<br>2-ஆம் பரிசு ரூ. 2,000<br>3-ஆம் பரிசு ரூ. 1,000 |
| 32. | பேரா. செ.யோகசுந்தரனார் அறக்கட்டளை<br>மனை எண் : 828,<br>மூன்றாம் முதன்மைச் சாலை,<br>டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர்,<br>வேலூர் - 632 006. | கதை, கட்டுரை,<br>கவிதை | 3 | முதல் பரிசு ரூ. 5,000<br>2-ஆம் பரிசு ரூ. 3,000<br>3-ஆம் பரிசு ரூ. 2,000 |
| 33. | அரிமா. மேலைபழனியப்பன்<br>செயலர், திருக்குறள் பேரவை,<br>72, சீனிவாசபுரம், கரூர் - 639 001.<br>செல் : 94435 93651<br>97891 34366 | கவிதை, இலக்கியம்<br>வரலாறு, சிறுவர்<br>இலக்கியம், தன்னம்பிக்கை<br>ஆன்மீகம், நாவல் | 2 | முதல் பரிசு ரூ. 5,000<br>2-ஆம் பரிசு ரூ. 3,000<br>3-ஆம் பரிசு ரூ. 2,000 |
| 34. | திருப்பூர் மத்திய அரிமா சங்கம்<br>35, ஸ்டேட் பாங்க் காலனி<br>காந்திநகர், திருப்பூர் - 641 603<br>செல் : 94435 59215<br>94433 63869 | பெண் எழுத்தாளர்களின்<br>நூல்கள் | 2 | ரூ. 25,000 |

| வ.எண் | விலாசம் | தலைப்பு | அனுப்ப வேண்டிய பிரதிகள் | பரிசுத்தொகை |
|---|---|---|---|---|
| 35. | கவிஞர் சுகந்தி சுப்பிரமணியன் நினைவுப் பரிசு<br>சு. ஸ்ரீமுகி,<br>7/271, குருவாயூரப்பன் நகர்,<br>7ஆவது தெரு, போயம்பாளையம்,<br>திருப்பூர் - 641 602.<br>செல் : 90434 09113 | நாவல், சிறுகதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு நாடகம், தொகுப்பு நூல்கள் | 1 | ரூ. 25,000 |
| 36. | எம்.வீ. பீமராஜா - ஜானகியம்மாள் டிரஸ்ட்<br>825, தென்காசி ரோடு,<br>இராஜபாளையம் - 626 117. விருதுநகர். | கலை, இலக்கியம், பண்பாடு, வரலாறு அறிவியல், சூழலியல் | 4 | 2 X ரூ. 10,000 = 20,000 |

**மேற்காணும் விலாசங்களிலிருந்து பரிசுப் போட்டிக்குரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய பிரதிகளுடன் சேர்த்தனுப்ப வேண்டும்.**

# மணிமேகலைப் பிரசுரத்தின் பரிசு பெற்ற நூல்கள்

**இலங்கை அரசின் தேசிய சாகித்ய விருது** ● "வடக்கு வீதி", ● "உலக மதங்கள் 40ஐப் பற்றிய அரிய தகவல்கள்" ரூ.400.00 ● நீலகேசனின் கவிதை நாடகங்கள், உண்மை என்றும் உயிர்பெறும், அடிவாரம், காதலுக்கு கல்யாணம்.

**மத்திய மாகாண சாகித்திய விருது** ● "உன்னையே உறவென்று"

**தமிழக அரசின் பரிசு** ● ''புல்லாங்குழல் வாசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்'' ரூ. 55.00 ● "விண்வெளியில் வீர காவியங்கள்" ரூ.125.00 ● "பொது அறிவுப் புதிர்கள்" பாகம்-1 ரூ.36.00 ● "தமிழக கிராமங்களில் பெண் சிசுக் கொலைகள் - தீர்வுகள்" ரூ.42.00 ● ''நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் போர் முறைகள்'' ரூ.35.00 ● ''மானம் காத்த மாவீரன்'' ● ''உலகத் திருமண முறைகளும் பழக்கவழக்கங்களும்'' ரூ. 49.00 ● ''ஒரு தொடர்கதை முற்றுப் பெறுகிறது'' ரூ. 35.00 ● ''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை - ஒரு கண்ணோட்டம்'' ● "கல்லீரல் நோய்களும் சிகிச்சை முறைகளும்" ரூ.33.00 ●"பாலைவனத்தில் ஒரு புல்லாங்குழல்'' 60.00 ● ''வாழ்வியல் முன்னேற்றம் பற்றிய சுதந்திரச் சிந்தனைகள்" ரூ. 100.00 ● "ஒரு தமிழரின் அமெரிக்கப் பயண அனுபவங்கள்" ரூ. 65.00 ● லேனா தமிழ்வாணனின் '500 ஒரு பக்கக் கட்டுரைகள்" (2009) இரண்டாவது பரிசு ● ''ஏலக்காய் பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ளுங்கள்'' ரூ. 55.00 ● ஜெயச்சந்திரன் எழுதிய "அன்றாட வாழ்வில் தேவைப்படும் சட்டங்கள்" ரூ. 120.00 ● திரு. குருபாதம் எழுதிய "போதிதர்மரைப் பற்றிய அற்புதமான விஷயங்கள்" ரூ. 200 ● திரு. லேனா தமிழ்வாணனின் "நேர நிர்வாகக் கலைக்களஞ்சியம்" ரூ. 420 ● பேராசிரியர் பாலசுந்தரத்தின் "பண்டைத் தமிழர் பண்பாடு - ஒரு புதிய நோக்கு" ● விஜயரத்தினம் எழுதிய "காலத்தை வென்ற காவிய மகளிர்."

**பாரத ஸ்டேட் வங்கியின் பரிசு** ● ''ஒரு பக்கக் கட்டுரைகள்'' பாகம்-12 ரூ. 34.00 ● பாகம்-14 ரூ. 30.00 ● "தவம்" ரூ.40.00 ● "மணிப்பர்ஸில் ஒரு போட்டோ" ரூ. 32.50 ● "மாயக்கோல் மந்திரவாதி" ●"தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் சிறுவர் சிறுகதைகள்" ● "என் வாழ்க்கைப் பாதையிலே" ● "உயிரின் முன்னுரை" ● "எனக்குப் பின் எவன்?" ● "தமிழோசை" ரூ. 21.00 ● "மனிதரில் டிசம்பர்கள்" ரூ.23.00 ● "தங்கத் தம்பி" (விற்பனை உரிமை) ரூ.15.00

**அனந்தாச்சாரி அறக் கட்டளையின் பரிசு** ● "அம்மா!" (நாவல்) ● "ஆங்கில மருத்துவச் சொல் அகராதி" ரூ. 96.00 ● "மணிப்பர்ஸில் ஒரு போட்டோ" ரூ. 32.50 ● "தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் சிறுவர் சிறுகதைகள்" ரூ. 37.00 ● அந்த கிராமத்தின் கதை.

**திருப்பூர் தமிழ்ச் சங்க இலக்கிய விருது** ● "தூண்கள்" ரூ. 21.00 ● "இடி மின்னல் மழை" ரூ. 30.00 ● "மானம் காத்த மாவீரன்" ● ஒரு கவிஞனின் கடைசி உயில் ● காதல் பூட்டு ● நோய்களும் மூடநம்பிக்கைகளும் ● பெண்ணுக்கு உரிமை தாரீர் ● நேர்மை ஒரு குற்றமா?

**துரைசாமி நாடார் இராஜம்மாள் விருது** ● “எல்லா மலரிலும் உன் வாசம்” ரூ.20.00 ● ”வெளிச்ச அழைப்புகள்” ரூ. 40.00 ● “புல்வெளிப் புன்னகை” ரூ. 25.00

**கவிதை உறவு பரிசுகள்** ●“லேனா தமிழ்வாணனின் 500 ஒரு பக்கக் கட்டுரைகள்” முதல் பரிசு 5,000; ●கவிஞர் கு. காளிமுத்து எழுதிய “சிறுவர்களுக்கான சின்னச் சின்னப் பாடல்கள்” முதல் பரிசு ரூ. 5,000; ●டோக்ரா எழுதிய “குடும்பமே கோயில்” இரண்டாம் பரிசு ரூ. 3,000; ●“ஆசிரியர் மாணவர்களை அணுக வேண்டிய புதிய முறைகள்” இரண்டாவது பரிசு ரூ. 3,000; ●“இலக்கியங்கள் சொல்லும் வாழ்வியல் நெறிகள்” மூன்றாவது பரிசு, ●“வாழ்வியல் முன்னேற்றம் பற்றிய சுதந்திரச் சிந்தனைகள்” இரண்டாம் பரிசு ரூ. 2,000.

**யோகசுந்தரம் அறக்கட்டளை, வேலூர்** ●“குமரிக்கண்டம் முதல் சுமேரியா வரை தமிழர் வரலாறு” ரூ. 150.00; ●க.ஜெயக்கொடி எழுதிய “கூட்டுக் குடும்பத்தின் மேன்மை” ரூ. 55.00.

**இதர பரிசுகள்** ● “ஒரு பத்திரிகையாளனின் மேலை நாட்டுப் பயண அனுபவங்கள்” ரூ.50.00 ● “சின்னஞ் சிறிய போதனைக் கதைகள்” ● “அரைகுறை அடிமைகள்” ரூ. 38.00 ● “பனிப்பாறைகளும் சுடுகின்றன” ரூ. 65.00 ● “தமிழைத் தேடி ஒரு பயணம்” ● “பழமையிலும் புதுமையான கண்ணோட்டங்கள்” ● “வாழ்க்கை வெல்வதற்கே” ● “நெசவாளர் ஊர்வலம்” ● “மாயக்கோல் மந்திரவாதி” ● ‘மாரியம்மாள் சபதம்” ரூ. 29.00 ● “சிநேகிதன்” ரூ.36.00 ● “சிகரம் தொடாத சிறகுகள்” ரூ. 42.00 - காசியூர் ரங்கம்மாள் - இலக்கியப் பரிசு முதல் பரிசு ரூ.2000 ● “இரண்டாவது அம்மா” ரூ. 45 டாக்டர் ரெ. முத்துக் கணேசனார் பவள விழா தமிழ் அறக்கட்டளை நாடக போட்டி பரிசு, ● காலம் அது போகும் கோலம் ரூ. 55.00 ● “புதுக்கவிதை ஓர் அலசல்” 43.00 ஈ ஆர். கிருஷ்ணன் அறக்கட்டளை ரூ. 2000. ● “சங்க இலக்கியங்கள் புலப்படுத்தும் வழிபாட்டு வரலாறு” திருவையாறு தமிழய்யா கல்விக் கழகம் பரிசு ரூ. 1000. ● திருப்பூர் தமிழ்ச்சங்கம் ரூ. 2000 பரிசு ● “அக்கா ஏன் அழுகிறாய்” ரூ. 60. பகுத்தறிவு இணையம் 1000 ரூபாய் பரிசு ● “கடவுளைப் படைத்தது யார்?” ரூ. 35. ● “புதியதோர் பாதை கண்ட புரட்சிப்பெண்” ரூ.50. ●”மானுடம் வளர்ப்போம் சாதியம் ஒழிப்போம்” ரூ. 60. ● “காற்றிலே கலந்து வந்த நாடகங்கள்” ரூ. 35. தமிழ்நாடு கலை இலக்கிய மன்றம் நாடகத்திற்கான பரிசு. ● தேனி இலக்கியக் கழகம் முதல் பரிசு லேனா தமிழ்வாணன் - லேனா தமிழ்வாணனின் ஒரு பக்க கட்டுரைகள் பாகம் - 20 ரூ. 65. ● அரிமா மூர்த்தியின் “வாழ்வது ஒருமுறை வாழ்த்தட்டும் தலைமுறை ● “செந்தமிழ் வளம்பெற வழிகள்;” ரூ.130 (2009 பரிசு) தமிழய்யா கல்விக் கழகம் ● “கற்றது கவிதை அளவு” ரூ.65 ● “100 ஒரு பக்கக் கதைகள்” விருதை ராஜா மெய்யறிவு மாத இதழ் ● ”இலக்கியம் காட்டும் நாடக இலக்கணம்” ரூ.375 (ரூ.5000.மெய்யப்பன் அறக்கட்டளை விருது) ● “போதிதர்மரைப் பற்றிய அற்புதமான விஷயங்கள்” ரூ. 200 ● பாபு புருஷோத்தமனின் “வாழ்வின் இலக்கு தூரமில்லை தொட்டுவிடலாம் ரூ.200” முதல்பரிசு ரூ.5000, கவிஓவியா பரிசு ரூ. 2000 ● சின்னப்பா அறக்கட்டளை லேனா தமிழ்வாணனின் 500 ஒரு பக்கக் கட்டுரைகள் ரூ. 375 ● கவிஞாயிறு தாராபாரதி அறக்கட்டளை பரிசு “உணர்வுகளின்

ஓசை” ரூ.55 மூன்றாம் பரிசு, ● வசந்தம் வரவேண்டும் ரூ.160 மூன்றாம் பரிசு ● தேவநேயப் பாவாணர் பிள்ளைத் தமிழ் ரூ.65 தனிப்பரிசு, ● தந்தைக்குக் கிடைத்த தங்கப் பதக்கம் ரூ.70. ஆறுதல் பரிசு. தமிழ்நாடு சினிமா கலை மன்றத்தின் சிறந்த எழுத்தாளர் என்.சி.இராமலிங்கம் ● ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும் ஆன்மிக விஷயங்கள் ரூ.125. ● இரா. மணிமேகலை எழுதிய அறிவியல் பொதிந்த ஆன்மீகம், ரூ.60 - கரூர் திருக்குறள் பேரவை பரிசு ● கு.சின்னப்பப்பாரதி அறக்கட்டளை விருது டாக்டர் சிங்காரவேல் எழுதிய “ஆத்தா கல்லறையில் ஒரு ஆவாரஞ்செடி” ரூ.150 ● டாக்டர் சிவ.தியாக ராஜா எழுதிய “தமிழ் மக்களும் தழுவிய மதங்களும்” ரூ.115 ● தமிழ்நாடு இலக்கியப் பெருமன்றம், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனப் பரிசு திரு.கோ.அரங்கநாதன் “முதுமை ஒரு சுமையல்ல” ரூ.80. ● நம் உரத்த சிந்தனை வழங்கிய இரண்டாம் பரிசு ரூ. 1000 கலா பாலசுப்ரமணியம் எழுதிய ‘மனுஷ்யபுத்ரி’ ரூ. 75. ● இறைநம்பி எழுதிய ‘நம் நாட்டையும் வீட்டையும் முன்னேற்றும் தர்ம நெறிகள்’ ரூ. 90.

**தொகையை அனுப்ப**
**எங்கள் வங்கிக் கணக்கு எண் விவரம்:**

**MANIMEKALAI PRASURAM**
**Account Number - 418745305**
**Indian Bank, Panagal Park**
**T.Nagar, Chennai.**
**Branch Code - 100**
**India. IFS Code - IDIB 000 T014.**

வெளிநாடுகளில் உள்ளவர்கள்
**Western Union Money Transfer** மூலம்
**SUBRAMANI MURUGESAN**
என்ற பெயருக்குத் தொகையை அனுப்பி வைக்கலாம்.